## நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தல் - 2014

## ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல்

**அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று (19.4.2014), ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலை முன்னிட்டு, 'எம்.ஜி.ஆர். சிலை அருகில், நங்கநல்லூர்' என்ற இடத்தில் கழக வேட்பாளர் திரு. V.N.P. வெங்கட்ராமன் அவர்களை ஆதரித்தும், ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் திரு. கே.என். ராமச்சந்திரன் அவர்களை ஆதரித்தும் ஆற்றிய எழுச்சிமிகு தேர்தல் உரை**

---

"அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டக் கழகச் செயலாளர்களே, கழக நிர்வாகிகளே, தலைமைக் கழக நிர்வாகிகளே, அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே, தோழமைக் கட்சிகளின் தலைவர்களே, தொண்டர்களே, பொதுமக்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் MGR–ன் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனதருமைக் கழக உடன்பிறப்புகளே, எனதருமை வாக்காளப் பெருமக்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பார்ந்த ஆலந்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களே, உங்களையெல்லாம் இன்று சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

2011–ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் போது எனது வேண்டுகோளினை ஏற்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியின் சார்பில் இந்தத் தொகுதியிலிருந்து போட்டியிட்ட திரு. பண்ருட்டி S. ராமச்சந்திரன் அவர்களை நீங்கள் வெற்றி பெறச் செய்தீர்கள்.

திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததன் காரணமாக தற்போது இங்கே இடைத் தேர்தல் நடைபெறுகிறது. இந்த இடைத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அன்புச் சகோதரர் திரு. V.N.P. வெங்கட்ராமன் அவர்கள் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கிறார். இவர் உங்களுக்கு நன்கு அறிமுகமானவர். கடந்த 2½ ஆண்டு காலம் சென்னை மாநகராட்சியின் ஆலந்தூர் பகுதி மண்டலக் குழுத் தலைவராக பதவி வகித்து; பல்வேறு நற்பணிகளை ஆற்றியுள்ளார். இவரைப் பற்றி உங்களுக்கு நன்றாகவே தெரியும். இவரை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று உங்களையெல்லாம் நேரில் சந்தித்து கேட்டுக் கொள்ளவே, வாக்கு சேகரிக்கவே இன்று நான் இங்கே வந்திருக்கிறேன்.

தமிழ்நாட்டு மக்களுக்கு சென்ற 2011 சட்டமன்ற தேர்தலில் என்னென்ன வாக்குறுதிகளை அளித்தோமோ; அவற்றை எல்லாம் படிப்படியாக நாங்கள் நிறைவேற்றி வருகிறோம். மொத்தம் அளித்த 177 வாக்குறுதிகளில் 150 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு; செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழக மக்களின் உணவு

பாதுகாப்பினை உறுதி செய்யும் வண்ணம்; அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையில்லா அரிசியை நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு 25,000 ரூபாய் உதவித் தொகையுடன் 4 கிராம் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பட்டம் அல்லது பட்டயப் படிப்பு படித்த ஏழைப் பெண்களுக்கு 4 கிராம் தங்கத்துடன் 50,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த 34 மாதங்களில் 3 லட்சத்து 47 ஆயிரம் ஏழைப் பெண்கள் பயன் அடைந்துள்ளனர். ஏழைத் தாய்மார்களின் நலனைக் கருத்தில் கொண்டு; விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை கிட்டத்தட்ட 89 லட்சம் குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன. எஞ்சிய தகுதியுள்ள குடும்பங்களுக்கு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் இவை வழங்கப்படும்.

கல்வியில் ஒரு புரட்சியை நாங்கள் செய்திருக்கிறோம். கடந்த இரண்டரை ஆண்டுகளில் கிட்டத்தட்ட 23 லட்சம் மேல்நிலை மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு விலையில்லா மடிக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. பள்ளி மாணவ, மாணவியருக்கு ஒவ்வொரு ஆண்டும் நான்கு விலையில்லா சீருடைகள், புத்தகப் பைகள், காலணிகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் உட்பட பல்வேறு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதி வண்டிகள் வழங்கப்படுகின்றன. இடை நிற்றலை குறைக்கும் பொருட்டு 10 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 5,000 ரூபாய் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

ஏழை, எளிய மக்களுக்கு பயனளிக்கக் கூடிய வகையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் நான்கு ஆண்டுகளுக்கு நான்கு லட்சம் ரூபாய் வரை ஒவ்வொரு குடும்பத்தினரும் சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். கடந்த 34 மாதங்களில் மட்டும் 6 லட்சம் நபர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் அடைந்துள்ளனர்.

சென்னை ஓமந்தூராரர் அரசினர் தோட்டத்தில் பன்முக உயர் சிறப்பு மருத்துவமனை தோற்றுவிக்கப்பட்டு உள்ளது. இந்த மருத்துவமனையில் உயரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 12,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த 34 மாதங்களில் 20 லட்சத்து 7 ஆயிரம் தாய்மார்கள் பயன் அடைந்துள்ளனர்.

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 37 லட்சம் பேர் பயன் அடைந்து வருகின்றனர். இது போன்ற எண்ணற்ற திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். இன்னும் பல திட்டங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளினால் ஏற்பட்டுள்ள விலைவாசி ஏற்றத்திலிருந்து உங்களைக் காக்க பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் குறைந்த விலையில் காய்கறிகளை நீங்கள் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. வெளிச் சந்தையில் ஒரு கிலோ அரிசி 20 ரூபாய்க்கு விற்க வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. ஏழை மக்கள் பசியாறி வயிறார உண்ணும் வகையில்; சென்னை மாநகராட்சியில் மட்டும் 203 அம்மா உணவகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இங்கு காலையில் இட்லி ஒரு ரூபாய்க்கும்; பொங்கல் 5 ரூபாய்க்கும்; மதியம் சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும்; தயிர் சாதம் 3 ரூபாய்க்கும்; எலுமிச்சை சாதம் மற்றும் கலவை சாதம் 5 ரூபாய்க்கும்; இரவு 2 சப்பாத்தி மற்றும் பருப்பு கடைசல் 3 ரூபாய்க்கும் வழங்கப்படுகின்றன. சமையல் எரிவாயு மீதான வரியை முற்றிலுமாக நான் நீக்கியுள்ளேன்.

முக்கியமான பேருந்து நிறுத்தம் மற்றும்; ரயில் நிலையங்களிலிருந்து நீங்கள் இல்லங்களுக்கு செல்ல வசதியாக சென்னை மாநகரம் முழுவதும் Small Bus–கள் இயக்கப்படுகின்றன.

ஆலந்தூர் தொகுதிக்கு என பல்வேறு திட்டங்களை கடந்த 34 மாதங்களில் நாங்கள் நிறைவேற்றி இருக்கிறோம். ஆலந்தூர் மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் வகையில்; 64 கோடியே 39 லட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட்டு; அதன் பயனை கடந்த பிப்ரவரி மாதம் முதல் நீங்கள் பெற்று வருகிறீர்கள். 81 லட்சம் ரூபாய் செலவில் ஆலந்தூர் நீர் வழங்கும் நிலையத்தினை மேம்படுத்தும் பணி நிறைவேற்றப்பட்டு உள்ளது.

இதே போன்று நந்தம்பாக்கம் பகுதி மக்களுக்காக 6 கோடி ரூபாய் செலவில் ஓர் ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மணப்பாக்கம் பகுதி மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 10 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டத்திற்கான பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் 60.22 கிலோ மீட்டர் நீள 292 சாலைப் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் 93 கோடியே 19 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு உள்ளன. இது தவிர, சென்னை மாநகராட்சி நிதி மூலம் 76.24 கிலோ மீட்டர் நீளமுள்ள 506 சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் பூங்காக்கள் அமைக்கும் பணிகள் 37 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தத் தொகுதியில் மட்டும் 6 கோடியே 68 லட்சம் ரூபாய் செலவில் 2,611 தெரு விளக்கு மின் கம்பங்கள் அமைக்கப்பட்டு, 2,395 சோடியம் வேப்பர் விளக்குகளும், 216 L.E.D விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இது தவிர, 23 கோடியே 14 லட்சம் ரூபாய் செலவில் 10.73 கிலோ மீட்டர் நீளமுடைய சாலைப் பணிகள் மற்றும் இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 35 கோடியே 78 லட்சம் ரூபாய் செலவில் 51.64 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகளும், வெள்ள நீர் வடிகால் பணிகள் மற்றும் பூங்காக்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது மட்டுமல்லாமல், 21 கோடியே 88 லட்சம் ரூபாய் செலவில் 7,423 தெரு விளக்கு கம்பங்கள் அமைத்து L.E.D விளக்குகள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆலந்தூர் தொகுதியில் 4 புதிய நகர்ப்புற சுகாதார மையங்கள் 40 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சவுரி தெருவில் செயல்பட்டு வரும் 50 படுக்கைகள் கொண்ட குடும்ப நல மையம், 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒரு கோடி ரூபாய் செலவில் அல்ட்ரா சவுண்ட் மற்றும் எக்ஸ் ரே வசதியுடன் கூடிய உயர் தர ரத்த பரிசோதனை மையம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. 50 லட்சம் ரூபாய் செலவில் டயாலிசிஸ் மையம் ஒன்றினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஏரிக்கரை தெருவில் 13 லட்சம் ரூபாய் செலவில் வீடு இல்லாத ஏழைகள் தங்குவதற்கு ஒரு தங்கும் விடுதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இந்தத் தொகுதியில் 462 பேர் பயன் பெற்றுள்ளனர்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் விரைந்து செயல்படுத்தப்படுகின்றன. இந்தப் பணிகள் நிறைவுறும் போது இந்தப் பகுதி ஒரு முக்கிய போக்குவரத்து மையமாக நிச்சயம் மாறுவதுடன், இங்கிருந்து நகரின் எந்தப் பகுதிக்கும் சென்று வருவதற்கான வசதிகள் ஏற்படும்.

இருப்பினும், உங்களுக்கு செய்ய வேண்டிய பணிகள் நிறைய உள்ளன. அவற்றையும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு படிப்படியாக நிச்சயம் நிறைவேற்றும் என்பதை மட்டும் இந்த சமயத்தில் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இடைத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் அன்புச் சகோதரர் திரு. V.N.P. வெங்கட்ராமன் அவர்கள் உங்களுக்கெல்லாம் நன்கு அறிமுகமானவர். அவர் உங்களுடனேயே இருப்பவர். உங்களையே சுற்றி சுற்றி வருவார். உங்களின் அடிப்படைத் தேவைகளை கேட்டறிந்து அவற்றை நிறைவேற்ற பாடுபடுவார்.

வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள் **24.4.2014** அன்று நடைபெற உள்ள ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் புரட்சித் தலைவர் MGR அவர்களின் வெற்றிச் சின்னமாம் ''இரட்டை இலை'' சின்னத்தில் வாக்களித்து கழக வேட்பாளர் அன்புச் சகோதரர் திரு. வெங்கட்ராமன் அவர்களை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்கள் அனைவரையும் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, தி.மு.க. வேட்பாளர் உட்பட மற்ற அனைவரையும் நீங்கள் டெபாசிட் இழக்கச் செய்ய வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா? நீங்கள் செய்வீர்களா? **(செய்வோம் என பலத்த கரகோஷம்)**

வாக்காளப் பெருமக்களே! இந்த இடைத் தேர்தலுடன், மக்களவைக்கான பொதுத் தேர்தலும் நடைபெறுகிறது. ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள், ஸ்ரீபெரும்புதூர் மக்களவைத் தொகுதி பொதுத் தேர்தலுக்கான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளரை வெற்றி பெறச் செய்தால் இன்னும் கூடுதல் நன்மைகளை உங்களுக்கு அளிக்க இயலும். உங்களுக்குத் தேவையான மத்திய அரசின் திட்டங்களை நாங்கள் இங்கே கொண்டு வருவோம். நடைபெறுகின்ற ரயில்வே பணிகளை விரைவு படுத்துவோம். உங்களுக்காக எங்களுடைய குரல் மத்தியிலே ஒலிக்கும். எனவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் அன்புச் சகோதரர் திரு. K.N. ராமச்சந்திரன் அவர்களுக்கும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கண்ட வெற்றிச் சின்னமாம் ''இரட்டை இலை'' சின்னத்தில் வாக்களித்து அவரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்புடன் வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் M.G.R. நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன் நன்றி வணக்கம்."

** ** ** **